# இலங்கையில் வகைப்பொறுப்புப் பற்றிய செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை

## நிறைவேற்றுச் சுருக்கம்

2009 மார்ச் 23ஆந் தேதியன்று ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கைக்கான விஜயத்தின் முடிவில், இலங்கைச் சனாதிபதியாலும் செயலாளர் நாயகத்தாலும் வெளியிடப்பட்ட கூற்றில் உள்ளடக்கப்பட்ட கூட்டு ஈடுபாட்டுப் பொறுப்பைச் செயற்படுத்துதல் பற்றி அவருக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை, 2010 ஜூன் 22ஆந் தேதியன்று செயலாளர் நாயகம் அறிவித்தார். இக் கூட்டுக் கூற்றில் செயலாளர் நாயகம் ''வகைப்பொறுப்புச் செயல்முறையொன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன்'' இலங்கை அரசாங்கமும் ''அம்மனக்குறைகளில் கவனஞ்செலுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்'' என்றும் ஏற்றுக்கொண்டது. குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை இலங்கையில் ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களாகச் சார்த்தப்பட்டவற்றின் தன்மையையும் நோக்கத்தையும் கவனத்திற்கொண்டு வகைப்பொறுப்புச் செயல்முறையொன்றுக்குப் பொருத்தமான வழிமுறைகள், ஏற்புடைய சர்வதேசக் கட்டளைத் தரங்கள் மற்றும் ஒப்பீட்டு அனுபவம் என்பவை தொடர்பில் செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை கூறுதலாகும். இக்குழுவின் உறுப்பினர்களாக **மர்சுகி தருஸ்மன் (இந்தோனேசியா)**, தலைவர்; **ஸ்ரீவன் ரட்னர் (ஐக்கிய அமெரிக்கா);** மற்றும் **யஸ்மின் சூகா (தென்னாபிரிக்கா)** ஆகியோரைச் செயலாளர் நாயகம் நியமித்தார். 2010 செப்ரெம்பர் 16ஆந் தேதியன்று அதன் பணியை முறைப்படி ஆரம்பித்த இக்குழுவுக்குச் செயலகமொன்று அதன் முழுக்காலமும் உதவியது.

### குழுவின் பணிக்கான சட்டகம்

யுத்தத்தின் கடைசிக் கட்டங்களிலிருந்து எழுகின்ற வகைப்பொறுப்புக் கடப்பாடுகளை விளங்கிக்கொள்ளும் பொருட்டு குழு அதன் செயலாற்று நியதிகள் தேவைப்படுத்தியவாறு ''சார்த்தப்பட்ட மீறல்களின் தன்மையையும் நோக்கத்தையும்'' பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டது. எவ்வாறாயினும் குழுவின் ஆணை உண்மையைக் கண்டறிதல் அல்லது விசாரணை செய்தல் வரை நீடிக்கவில்லை. சார்த்துரைகளின் பரப்பை வேறுபடுத்திக்காட்டும் பொருட்டும், கைவசமுள்ள தகவல்களின் அடிப்படையில் சார்த்துரைகளில் எவை நம்பத்தக்கவையென்று மதிப்பீடு செய்யும் பொருட்டும் அவற்றைச் சட்டப்படி மதிப்பிடும் பொருட்டும் குழு பல்வகைப்பட்ட மூலங்களிலிருந்தும் தகவல்களை ஆராய்ந்து பார்த்தது. ஒரு சார்த்துரைக்கு ஆதாரமான செயல் அல்லது நிகழ்வு நடைபெற்றுள்ளதென்று நம்புவதற்கு நியாயமான அடிப்படையொன்று இருந்திருக்குமாயின் அச்சார்த்துரை நம்பத்தக்கதெனக் குழு தீர்மானித்தது. இத் தரக்கட்டளை அரசு அல்லது வேறு செயற்பாட்டாளர்கள் பதிற் செயலாற்ற வேண்டி சட்டப் பொறுப்பொன்றை எழுப்புகின்றது. குழு பொருத்தமானதும் நம்பிக்கைக்குரியதுமென்று கருதுகின்ற முதனிலை மூலங்களை அடிப்படையாகக் கொண்ட சார்த்துரைகள் மட்டும்தான் இவ்வறிக்கையில் நம்பத்தக்கனவாகக் கருதப்படுகின்றன. இலங்கையினதைப் போன்று ஓர் ஆயுத மோதலின் போது சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேசச் சட்டத்தின் பழைமைவாய்ந்த மெய்க்கோளின் அடிப்படையில் குழு அதன் சட்ட மதிப்பீட்டை மேற்கொண்டது. குழு சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் விதிகளை, யுத்தத்தில் முதனிலைச் செயற்பாட்டாளர்களான தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகிய இரு பக்கத்தினரும் சம்பந்தப்பட்ட நம்பத்தக்க சார்த்துரைகளுக்குப் பிரயோகித்தது. ஒவ்வொரு பக்கத்தாலும் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களோ (அரசாங்கத்தின் தரப்பில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுதல், எல்.ரி.ரி.ஈ. இன் தரப்பில் தனிவேறான ஒரு தாயகத்துக்காகப் போராடுதல்) அல்லது பயன்படுத்திய உத்திகளின் செவ்விசைவற்றதன்மையோ சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் ஏற்புடைமையைப் பாதிக்கவில்லை.

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களாகச் சார்த்தப்படுவனவற்றை விசாரணை செய்து பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டுமென்று தேவைப்படுத்துகின்ற பல்வேறு மனித உரிமை உடன்படிக்கைகளுக்கு இலங்கை ஒரு தரப்பாயுள்ளது; ஆயுத மோதலுக்கு ஏற்புடைய வழமையான சர்வதேசச் சட்டமும் அத்தகைய கடப்பாடுகளை உள்ளடக்குகின்றது. குழு இச்சட்டக் கடப்பாடுகளை வலியுறுத்துவதுடன், செயலாளர் நாயகத்துக்கு அதன் ஆலோசனையை வழங்குவதில் பல்வேறு ஐக்கிய நாடுகள் ஆவணங்களில் வெளிப்படுத்தப்பட்ட சர்வதேசக் கட்டளைத் தரங்களையும் உடன்படிக்கை அமைப்புக்களின் கருத்துக்களையும் பெருமளவில் பயன்படுத்தியுள்ளது. சர்வதேசச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு வகைப்பொறுப்பைச் சாதிப்பதில், மறுபடியும் நிகழாதிருப்பதற்கான நிறுவனரீதியான உத்தரவாதங்கள்

உட்பட, உண்மைக்கான உரிமையும் நீதிக்கான உரிமையும் ஈடுசெய்தல்களுக்கான உரிமையும் சம்பந்தப்பட்டுள்ளனவென்ற முக்கிய புரிந்துணர்வை இம் மூலங்கள் வெளிப்படுத்துகின்றன. வகைப்பொறுப்பை உறுதிப்படுத்துவதில் ஒத்த சவால்களை எதிர்நோக்கிய அனேக ஏனைய நாடுகளில் விருத்தி செய்யப்பட்டனவும், இக்கட்டளைத் தரங்களுக்கு முரண்படாதனவுமான பல்வகைப்பட்ட காரியசாத்தியமான அணுகுமுறைகளையும் குழு பயன்படுத்தியது. குழு இச்சட்டத்தை வகைப்பொறுப்புக்கான அணுகுமுறை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் இற்றை வரை எடுக்கப்பட்டுள்ள உள்நாட்டுக் கொள்கையையும் நடவடிக்கைகளையும் நிறுவனங்களை விருத்தி செய்வதற்கும் பயன்படுத்தியுள்ளது. இறுதியாக அதன் ஆலோசனையை முறைப்படுத்துவதில் குழு இலங்கையில் நீண்ட காலம் நீடித்த ஆயுத மோதலில் இரு தரப்புக்களினதும் நடவடிக்கைகளினால் கடுந்துயரமான விளைவுகளை அனுபவித்த பலியாட்களின் உரிமைகளுக்கும் தேவைகளுக்கும் முன்னுரிமை அளித்துள்ளது; பெண்களும் பிள்ளைகளும் முதியவர்களும்தான் வழமையாக யுத்தங்களின் போது துன்பத்தினதும் இழப்பினதும் பாரத்தைப் பொறுக்கின்றனர். இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல.

**குழுவால் நம்பத்தக்கனவாகக் காணப்பட்ட சார்த்துரைகள்**

நம்பத்தக்க சார்த்துரைகள் பற்றிய குழுவின் தீர்மானம், யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் பற்றி இலங்கை அரசாங்கம் இன்று வரை உண்மையென வற்புறுத்தி வந்ததற்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு காட்சிவிளக்கத்தை வெளிப்படுத்துகின்றது. அது ''மனிதாபிமான மீட்பு நடவடிக்கை'' ஒன்றை ''பூச்சிய சிவிலியன் இழப்புக்கள்'' என்ற கொள்கையுடன் பின்பற்றியதாக அரசாங்கம் கூறுகின்றது. இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக, இலங்கை அரசாங்கம் மற்றும் எல்.ரி.ரி.ஈ. ஆகிய இரண்டும் எண்பிக்கப்படுமாயின், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கும் எதிராக ஒரு பரந்த வீச்சைக் கொண்ட பாரதூரமான மீறல்களைப் புரிந்தனவென்று காட்டுகின்ற நம்பத்தக்க சார்த்துரைகளைக் குழு கண்டது. அவற்றில் சில யுத்தக் குற்றங்களாகவும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் அமையக்கூடும். உண்மையில் யுத்தம் நடத்தப்பட்ட முறை, யுத்தத்தின் போதும் சமாதானத்தின் போதும் தனிப்பட்டவரின் மாண்பைப் பாதுகாப்பதற்கு வடிவமைக்கப்பட்ட சர்வதேசச் சட்டத்தின் முழு ஆட்சியின் மீதும் ஒரு கடுமையான தாக்குதலைக் குறித்தது.

குறித்துக் கூறத்தக்கதாக யுத்தத்தின் இறுதிக் கட்டங்களுடன் தொடர்புடைய நம்பத்தக்க சார்த்துரைகளைக் குழு கண்டது. 2008 செப்ரெம்பருக்கும் 2009 மே 19க்கும் இடையில் இலங்கை இராணுவம் பாரிய அளவிலும் பரந்தரீதியிலும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டு பெருந்தொகையான குடிமக்களுக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்தி வன்னியினுள் அதன் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துச் சென்றது. இந்நடவடிக்கை வன்னிக் குடிசனத்தின் மீதான அடக்குமுறை அட்டூழியமாக அமைந்தது. ஏறக்குறைய 330,000 குடிமக்கள் ஷெல் தாக்குதலிலிருந்து தப்பியோட முடியாமல் எல்.ரி.ரி.ஈ. யால் பணயம் வைக்கப்பட்டவர்களாக நாளாந்தம் குறைந்து வருகின்ற ஒரு பரப்பினுள் சிக்குண்டனர். அரசாங்கம் ஆட்களைக் கடத்துவதற்கும் காணாமற் போகப்பண்ணுவதற்கும் வெள்ளை வான்களைப் பயன்படுத்துதல் அடங்கலாக, பல்வகைப்பட்ட அச்சுறுத்தல்கள் மூலமும் நடவடிக்கைகளூடாகவும் யுத்தத்தை விமர்சிக்கும் ஊடகங்களையும் ஏனைய விமர்சகர்களையும் மிரட்டி அடக்கவும் வாயடங்கச் செய்யவும் முனைந்தது.

அரசாங்கம் பாரிய ஆயுதங்களைப் பயன்படுத்துதலை நிறுத்திவிடுமென்று தெரிவித்த பின்னரும் கூட, குடிமக்களை ஒருமுகமாகக்கூடுவதற்கு அது ஊக்குவித்த மூன்று தொடர்ச்சியான தாக்குதலற்ற வலயங்களில் மிகப் பரந்த அளவில் ஷெல் தாக்குதலை நடத்தியது. அது ஐக்கிய நாடுகளின் கேந்திர மையம், உணவு விநியோக வழிகள் ஆகியவற்றின் மீதும் காயமடைந்தவர்களையும் அவர்களின் உறவினர்களையும் கடற்கரைகளிலிருந்து ஏற்றிச் செல்வதற்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ICRC) கப்பல்களுக்கு அருகாகவும் ஷெல் தாக்குதலை நடத்தியது. தாக்குதலின் விளைவு பற்றி அதன் சொந்தப் புலனாய்வு முறைமைகளாலும் ஐக்கிய நாடுகளின், ICRCஇன் மற்றும் ஏனையோரின் அறிவித்தலூடாகவும் அது அறிந்திருந்த போதிலும் ஷெல் தாக்குதலை அது நடத்தியது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் பெரும்பாலான குடிசன உயிரிழப்புக்கள் அரசாங்கத்தின் ஷெல் தாக்குதலினால் ஏற்பட்டன.

அரசாங்கம் முன்னரங்கங்களிலுள்ள வைத்தியசாலைகள் மீது ஒழுங்கு தவறாமல் திட்டமிட்டு ஷெல் தாக்குதல் நடத்தியது. வன்னியிலிருந்த எல்லா வைத்தியசாலைகளும் மோட்டார் குண்டுகளாலும் பீரங்கிக் குண்டுகளாலும் தாக்கப்பட்டன. அரசாங்கம் அவற்றின் அமைவிடங்களை நன்கறிந்திருந்த போதிலும், அவற்றில் சில திரும்பத்திரும்பத் தாக்கப்பட்டன. மேலும் அரசாங்கம்

மோதல் வலயத்திலிருந்த மக்களுக்கு, உணவு மற்றும் மருத்துவ வழங்கல்கள், மனிதாபிமான உதவியை இழக்கச் செய்து அவர்களின் துன்பத்தை அதிகரித்தது. இந் நோக்கத்துக்காக அது மோதல் வலயத்தில் தொடர்ந்துமிருந்த குடிமக்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பிட்டது. 2009 சனவரி முதல் மே வரை பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது உயிர்களை இழந்தனர். அவர்களில் அனேகர் இறுதி சில நாட்களின் படுகொலையில் பெயர் அறியப்படாதவர்களாக இறந்து போயினர்.

அரசாங்கம் மோதலில் பலியானவர்களையும் உயிர் பிழைத்தவர்களையும் அவர்கள் மோதல் வலயத்திலிருந்து வெளியேறிய பின்னரும் மேலும் இடர்ப்பாடுகளுக்கும் துயரத்துக்கும் ஆட்படச் செய்தது. எல்.ரி.ரி.ஈ. சந்தேக நபர்களை வகைப்படுத்தித் தெரிந்தெடுத்தல் எவ்விதமான வெளிப்படையான தன்மையோ வெளிப்புற ஆய்வு நோக்கோ இல்லாமல் இடம்பெற்றது. தனிவேறாக்கப்பட்டவர்களில் சிலர் விசாரணை நடவடிக்கை எதுவுமின்றிக் கொல்லப்பட்டதுடன் சில பெண்கள் வன்புணர்ச்சிக்கும் உட்படுத்தப்பட்டிருக்கலாம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) விசாரணைகளின் போது அவர்களின் மனைவிமாரும் உறவினர்களும் கூறியவாறு ஏனையோர் காணாமற் போயினர். உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் (IDPs) அனைவரும் மூடப்பட்ட முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்டவர்களின் அடிப்படைச் சமூக, பொருளாதார உரிமைகளை மீறுகின்றதாக, மிதமிஞ்சிய மக்கள் நெரிசலாகத் திணித்து அடைக்கப்பட்டமை படுமோசமான நிலைமைகளுக்கு வழிவகுத்ததுடன் அனாவசியமாக அனேக உயிர்களும் இழக்கப்பட்டன. முகாம்களிலிருந்து சில ஆட்கள் விசாரணை செய்யப்பட்டதுடன் சித்திரவதைக்கும் ஆட்படுத்தப்பட்டனர். எல்.ரி.ரி.ஈ. எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள், மேலும் துர்ப்பிரயோகங்களுக்கு அவர்கள் இலகுவில் ஆளாகக்கூடிய நிலைமைகளின் கீழ், வெளி உலகுடன் தொடர்பற்ற வேறு இடங்களுக்கு அகற்றப்பட்டனர்.

மோதல் வலயத்தில் கடுமையான ஆபத்தின் மத்தியிலும் எல்.ரி.ரி.ஈ. குடிமக்கள் வெளியேறுவதற்கு அனுமதியளிக்க மறுத்து, அவர்களைப் பணயக்கைதிகளாகப் பயன்படுத்தியதுடன், சில சந்தர்ப்பங்களில் அவர்களின் இருப்பை முன்னேறுகின்ற இலங்கை இராணுவத்துக்கும் தமக்கும் இடையிலான ஒரு தந்திரோபாய மனித அடிதாங்கியாகக்கூடப் பயன்படுத்தியது. யுத்த காலம் பூராவும் அது பலவந்தமான ஆட்சேர்ப்புக் கொள்கையொன்றைச் செயற்படுத்தியது. எனினும், இறுதிக் கட்டங்களில் பதினான்கு வயதுதான் ஆன இளம் பிள்ளைகள் உட்பட எல்லா வயது ஆட்களையும் கொண்டதாக அதன் ஆட்சேர்ப்பைப் பெருமளவு தீவிரப்படுத்தியது. எல்.ரி.ரி.ஈ. அதன் சொந்தப் பாதுகாப்பு அரண்களுக்காகப் பதுங்குகுழிகளைத் தோண்டுவதற்கும் வேறு பீரங்கி மேடைகளை அமைப்பதற்கும் குடிமக்களைப் பலவந்தமாக ஈடுபடுத்தியதன் மூலம் போராளிகளுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவற்றதாக்கிக் குடிமக்களை மேலதிக தீங்குக்கு வெளிப்படுத்தியது. இவை எல்லாம் தெளிவாகத் தோல்விகண்டுவிட்ட ஒரு யுத்தத்தை தொடருகின்ற இலக்குடன் செய்யப்பட்டன; எல்.ரி.ரி.ஈ. இன் இலக்கென்ற பலிபீடத்திலும் அதன் மூத்த தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதற்கான அதன் முயற்சிகளிலும் அனேக குடிமக்கள் பலிகொடுக்கப்பட்டனர். 2009 பெப்ருவரியிலிருந்து எல்.ரி.ரி.ஈ. மோதல் வலயத்திலிருந்து தப்பியோட முனைந்த குடிமக்களை நேரடியாகச் சுட்டுக்கொல்லத் தொடங்கியதனால் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் உயிர்ச்சேதம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. அது உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களின் (IDPs) பெருந்திரள்களுக்கு அண்மையாகப் பீரங்கிக் குண்டுகளை ஏவியதுடன் IDPகளுக்கு அல்லது வைத்தியசாலைகள் போன்ற குடிமக்களின் அமைவுகளுக்கு அருகிலிருந்து எறிபடைகளை இயக்கியது அல்லது அவற்றுக்கருகில் இராணுவத் தளபாடங்களைக் களஞ்சியப்படுத்தியது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் பூராகவும் எல்.ரி.ரி.ஈ. மோதல் வலயத்துக்கு வெளியே தற்கொலைத் தாக்குலென்ற அதன் கொள்கையைத் தொடர்ந்தது. மோதலின் முந்திய கட்டங்களுடன் ஒப்பிடுகையில் அத்தகைய தாக்குதல்களைப் புரிவதற்கான அதன் ஆற்றல் குறைவாக்கப்பட்ட போதிலும் அது மோதல் வலயத்துக்கு வெளியே குடிமக்களுக்கெதிராகப் பல்வேறு தாக்குதல்களைப் புரிந்தது.

எனவே, முடிவாகக் குழு, இலங்கை அரசாங்கத்தால் புரியப்பட்ட பாரதூரமான மீறல்களாக இருக்கக்கூடிய ஐந்து முக்கிய வகுதிகளைக் கொண்ட நம்பத்தக்க சார்த்துரைகளைக் கண்டது: (i) பரந்தரீதியிலான ஷெல் தாக்குதலூடாகக் குடிமக்களைக் கொல்லுதல்; (ii) வைத்தியசாலைகள் மீதும் மனிதாபிமான இலக்குகள் மீதும் ஷெல் தாக்குதல்; (iii) மனிதாபிமான உதவியை மறுத்தல்; (iv) IDPகள் மற்றும் எல்.ரி.ரி.ஈ. போராளிகளாகச் சந்தேகிக்கப்பட்டவர்கள் உட்பட, மோதலில் பலியானவர்களும் எஞ்சிப் பிழைத்தவர்களும் அனுபவித்த மனித உரிமை மீறல்கள்; அத்துடன் (v) ஊடகங்களுக்கும் அரசாங்கத்தை விமர்சித்த ஏனையோருக்கும் எதிரானவை உட்பட, மோதல் வலயத்துக்கு வெளியிலான மனித உரிமை மீறல்கள்

யுத்தத்தின் கடைசிக் கட்டங்களுடன் தொடர்புடையனவாக எல்.ரி.ரி.ஈ.க்கு எதிரான நம்பத்தக்க சார்த்துரைகள் பற்றிய குழுவின் தீர்மானம் பாரதூரமான மீறல்களாக இருக்கக்கூடிய ஆறு முக்கிய வகுதிகளை வெளிப்படுத்துகின்றது; (i) குடிமக்களை ஒரு மனித அடிதாங்கியாகப் பயன்படுத்துதல்; (ii) எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டிலிருந்து தப்பியோட முயற்சித்த குடிமக்களைக் கொல்லுதல்; (iii) குடிமக்களுக்கு அண்மையாக இராணுவத் தளபாடங்களைப் பயன்படுத்துதல்; (iv) சிறுவர்களைப் பலவந்தமாகப் படையில் சேர்த்தல்; (iv) பலவந்தமான ஊழியம்; அத்துடன் (vi) தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் குடிமக்களைக் கொல்லுதல்

**வகைப்பொறுப்பு**

சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத்தின் பாரதூரமான மீறல்களுக்கான வகைப்பொறுப்பானது தெரிவுக்கான அல்லது கொள்கைக்கான ஒரு விடயமல்ல; அது உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சட்டத்தின் கீழான ஒரு கடமை. நம்பக்கூடியனவாகச் சார்த்தப்பட்ட இம்மீறல்கள் காத்திரமான விசாரணையையும் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்படுதலையும் வற்புறுத்திக் கோருகின்றன. அவை எண்பிக்கப்பட்டால் இலங்கை இராணுவத் தளபதிகளும் அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளும், அவ்வாறே எல்.ரி.ரி.ஈ. யின் இராணுவ மற்றும் குடிசனத் தலைவர்களும் உட்பட, அவற்றுக்குப் பெரிதும் பொறுப்பானவர்கள் சர்வதேசக் குற்றங்களுக்கான குற்றம் பொறுப்புடையவர்களாவர்.

அதேவேளையில் வகைப்பொறுப்பு புரியப்பட்டுள்ள பாரதூரமான குற்றங்களின் புலன்விசாரணைக்கும் வழுக்குத்தொடுப்புக்கும் அப்பால் செல்கின்றது; இன்னுஞ் சரியாகச் சொல்வதாயின் அது, மனித உரிமைகளினதும் மனித மாண்பினதும் கடந்தகால மீறல்களுக்குத் தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் அரசியல், சட்ட மற்றும் தார்மீகப் பொறுப்பில் கவனஞ்செலுத்துகின்ற ஓர் அகல்விரிவான செயல்முறை. மேலே குறிப்பிடப்பட்ட சர்வதேசத் தரக்கட்டளைகளுக்கு ஒத்திசைவானதாக வகைப்பொறுப்பு இன்றியமையாதவாறு உண்மையையும் நீதியையும் பலியானவர்களுக்கு ஈடுசெய்தல்களையும் உள்ளடக்குகின்றது. வகைப்பொறுப்பு அதன் பிரசைகளின் உரிமைகள் மீறப்பட்டிருக்கும் போது, அவ்வாறு மீறுவதில் அரசின் பங்கையும் பொறுப்பையும் அது உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் தேவைப்படுத்துகின்றது. ஐக்கிய நாடுகளின் கொள்கைக்கிணங்கக் குழு, வகைப்பொறுப்புக்கு ''எல்லாவற்றுக்கும் ஒரே அளவு பொருந்தும்'' என்றதொரு சூத்திரத்தையோ அல்லது வெளிநாட்டு முன்மாதிரிகளின் இறக்குமதியையோ பரிந்துரைக்கவில்லை; மேலும் திருத்தமாக அது பரந்த பிரசைகளின் பங்குபற்றல், தேவைகள் மற்றும் அபிலாசைகள் சம்பந்தப்பட்ட தேசிய மதிப்பீடுகளின் அடிப்படையில் வகைப்பொறுப்புச் செயல்முறைகள் வரையறை செய்யப்பட வேண்டியதற்கான தேவையைக் கண்டுணர்கின்றது. எவ்வாறாயினும் தேசியச் செயல்முறை எதுவும் வகைப்பொறுப்புக்கான தரங்களை நிறைவேற்றத்தான் வேண்டும். எனவே வகைப்பொறுப்புக்கான இலங்கையின் அணுகுமுறை, யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் பலியானவர்கள் உண்மைக்கும் நீதிக்கும் ஈடுசெய்தல்களுக்குமான தமது உரிமைகளை எய்துவதற்கு அது எந்தளவு பயனுறுதியுள்ள முறையில் இடமளிக்கின்றதென்பதை உய்த்துணர்வதற்கு அது அத்தரக்கட்டளைகளுக்கும் ஒப்பிடத்தக்க அனுபவங்களுக்கெதிராக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

அரசாங்கம் மீட்டளிப்பு நீதிக்கு முதன்மையளித்து நல்லிணக்கத்தையும் வகைப்பொறுப்பையும் சமநிலைப்படுத்த முனைவதாகத் தெரிவித்துள்ளது. மீட்டளிப்பு நீதிக்கும் பழிதீர்க்கும் நீதிக்கும் இடையில் ஒரு தெரிவை வற்புறுத்துவதானது ஒரு பொய்யான பிரிவுபடுத்தலை முன்வைக்கின்றது. இரண்டும் தேவைப்படுகின்றன. மேலும் குழுவின் கருத்துப்படி மீட்டளிப்பு நீதி பற்றிய அரசாங்கத்தின் கருத்துப்பாங்கு குறைபாடுடையது. ஏனென்றால் உண்மையிலும் நீதியிலும் ஈடுசெய்தல்களிலும் கவனஞ்செலுத்துகின்ற உண்மையான, பலியானவரை மையப்படுத்திய வகைப்பொறுப்பை அது பயங்கரவாதத்திலிருந்து பிரசைகளைப் பாதுகாப்பதற்கான கடந்தகால அரசாங்கக் கொள்கைகளுக்கும் அவற்றின் தோல்விக்குமான அரசியல் பொறுப்பென்ற தெளிவற்ற ஒரு கருத்துப் பாங்கினால் பதலீடு செய்கின்றது. மேலுமொரு வலியுறுத்தல் தெளிவாகக் குறித்த சில எல்.ரி.ரி.ஈ. போராளிகளின் குற்றமுடைமை பற்றியது. இவ்விடயத்தில் அரசாங்கத்தின் திட்டம் உயிர்பிழைத்திருக்கின்ற எல்.ரி.ரி.ஈ. போராளிகள் மத்தியில் பெரும்பான்மையினருக்குப் புனர்வாழ்வளிக்கவும் ''தீவிரமானவர்களுக்கு'' கடுமையற்ற தண்டனையளிக்கவும் எண்ணுகின்றது. குழுவுக்கு விளக்கப்பட்டவாறு, கடந்தகால அரசாங்கங்களினதும் எல்.ரி.ரி.ஈ. யினதும் பொறுப்பின் மீது கவனஞ்செலுத்துகின்ற, வகைப்பொறுப்புப் பற்றிய அரசாங்கத்தின் இரு முனைக் கருத்துப்பாங்கு, யுத்தத்தின் இறுதிக் கட்டங்களை மேற்கொள்வதில் அரசாங்கத்தின் தீர்மானங்களையும் நடத்தையையுமோ அல்லது பின்விளைவையோ அல்லது அதன் விளைவாக இடம்பெற்றிருக்கக்கூடிய சட்ட மீறல்களையோ காத்திரமான முறையில் ஆராய்ந்து பார்க்க எண்ணவில்லை. வகைப்பொறுப்புப் பற்றிய அரசாங்கத்தின் கருத்துப்பாங்கு

சர்வதேசக் கட்டளைத் தரங்களுக்கு இணங்கியதில்லையெனக் குழு முடிவுசெய்துள்ளது. இரு பக்கங்களாலும் புரியப்பட்ட மீறல்கள் பற்றிய சார்த்துரைகளில் அரசாங்கம் உண்மையாகக் கவனஞ்செலுத்தி வகைப்பொறுப்புக்கான அதன் அணுகுமுறையில் மோதலில் பலியானவர்களின் உரிமைகளையும் மாண்பையும் மையப்படுத்தினாலன்றி, அதன் நடவடிக்கைகள் சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் ஏமாற்றமளிப்பனவாயிருக்கும்.

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு**

அரசாங்கம், 2002இல் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் தொடங்கி 2009 மேயில் மோதலின் முடிவு வரையிலுமான கடந்த காலத்தில் கவனஞ்செலுத்துவதற்கான அதன் கொள்கையின் ஆதாரக்கல்லாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (LLRC) குறிக்கின்றது; தாமாகவே தமது சொந்த முயற்சியின் பேரில் முன்வந்து ஆணைக்குழுவுடன் பேசுவதற்கு முனைந்த பெருந்தொகையான மக்களால், குறிப்பாகப் பலியானவர்களால் அத்தகையதோர் உரையாடலுக்கான தேவை தெளிவாக விளக்கிக் காட்டப்படுகின்றது.

இருந்த போதிலும் LLRC, அதன் ஆக்கஅமைவினாலும் அதன் உறுப்பினர்கள் சிலரின் ஆழமாக வேரூன்றிய நலன் முரண்பாடுகளினாலும் ஐயுறவுநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதனால், சுயாதீனமும் பக்கச் சார்பின்மையுமென்ற முக்கிய சர்வதேசக் கட்டளைத் தரங்களைத் திருப்திசெய்யத் தவறுகின்றது. LLRCக்கு வழங்கப்பட்ட ஆணையும் அதேபோன்று இன்று வரை அதன் பணியும் முறையியலும், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் பற்றிய சார்த்துரைகளை விசாரணை செய்வதற்கு அல்லது பல தசாப்தங்களாக நீடித்த இன முரண்பாட்டின் மூலகாரணங்களை ஆராய்ந்து பார்ப்பதற்குப் பொருத்தமானவையாக அமையவில்லை; அதற்குப் பதிலாக இவை, அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட குறைபாடுடையதும் ஒருபக்கச் சார்பானதுமான வகைப்பொறுப்புக் கருத்துப் படிவத்தின் பகுதியாக அமைகின்ற, மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் பொறுப்பென்ற பரந்த கருத்துப்பாங்கில் கடுமையாகக் கவனஞ் செலுத்துகின்றன. இன்று வரையிலான அதன் பணி, LLRC ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களில் நடந்ததைப் பற்றிய தன்னியல்பான உண்மைக்கான தேடுதலை நடத்தவில்லை: யுத்தத்துக்கான இரு பக்கங்களினதும் பாரதூரமான மீறல்கள் பற்றிய சார்த்துரைகளை முறைதவறாமலும் பக்கச் சார்பின்றியும் விசாரணை செய்வதற்கு முனையவில்லை; பலியானவர்களின் மாண்புக்கும் அவர்களின் துன்பத்துக்கும் பூரண மதிப்பளிக்கின்ற வகையில் பலியானவர்களை நடத்துகின்ற ஓர் அணுகுமுறையைப் பயன்படுத்தவில்லை; அத்துடன் உண்மையான தனிப்பட்ட ஆபத்துச் சூழ்நிலைகளில் தன்னும் சாட்சிகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கவில்லை, என்பதைக் கண்கூடாகக் காட்டுகின்றது.

மொத்தத்தில் LLRC ஆழமான குறைபாடுடையது, பயனுறுதியுள்ள வகைப்பொறுப்புப் பொறிமுறையொன்றுக்கான சர்வதேசக் கட்டளைத் தரங்களை நிறைவேற்றவில்லை என்பதனால், வகைப்பொறுப்புச் செயல்முறையொன்றுக்கான இலங்கைச் சனாதிபதியினதும் செயலாளர் நாயகத்தினதும் கூட்டு ஈடுபாட்டுப் பொறுப்பை அது திருப்திசெய்யவிலலை என்பதுடன் அதனால் திருப்திசெய்யவும் முடியாது.

**ஏனைய உள்நாட்டுப் பொறிமுறைகள்**

LLRC இன் செயற்பாட்டை அல்லது அதன் விளைவுகளைப் பொருட்படுத்தாமல், வகைப்பொறுப்பைப் பின்தொடர்வதில் நீதி முறைமை முன்னணிப் பங்கொன்றை வகிக்க வேண்டும். எனினும் அம்முறைமையின் கடந்த காலச் செயல்நிறைவேற்றினதும் நடப்புக் கட்டமைப்பினதும் மீளாய்வொன்றின் அடிப்படையில் இப்போதுள்ள அரசியல் சூழலில் அது நீதிக்குச் சேவையாற்றுமென்பதில் குழுவுக்கு நம்பிக்கை குறைவு. இதற்குக் கூடுதலான காரணம் ஆற்றலின்மையை விட அரசியல் துணிவின்மையாகும். சனாதிபதிப் பதவியில் அதிகாரம் கூடுதலாகச் செறிந்துள்ளதனால், அண்மிய ஆண்டுகளில் குறிப்பாகச் சட்டமா அதிபரின் சுதந்திரம் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது. மேலும் அவசரகால ஒழுங்குவிதிகள் தொடர்ந்து விதிக்கப்படுகின்றமை. இப்போதுள்ள வடிவத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துடன் இணைந்து, நீதித்துறை முறைமை மனித உரிமைகளுக்கான உத்தரவாதங்களை உறுதியாகக் கடைப்பிடிக்கின்ற அதேவேளையில் அதிகாரபூர்வப் பொல்லாங்கில் கவனஞ்செலுத்தக் கூடுமாயிருப்பதற்கு முக்கிய தடையாயுள்ளது. சமமான அளவில், இராணுவ நீதிமன்ற முறைமை யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் அது இனங்கண்டுள்ள நம்பக்கூடிய சார்த்துரைகள் அல்லது புரியப்பட்ட வேறு குற்றங்கள் தொடர்பில் பயனுறுதியுள்ள வகைப்பொறுப்புப் பொறிமுறையாக இயங்கியுள்ளதென்பதற்குச் சான்றெதனையும் குழு காணவில்லை.

வகைப்பொறுப்பைச் சாதிப்பதில் பங்கொன்றை வகிக்கக்கூடிய ஏனைய உள்நாட்டு நிறுவனங்களும் கடுமையான வலுக்குறைவுகளைத் தெளிவாகக் காட்டுகின்றன. கடந்த மூன்று தசாப்தங்களாகப் பல்வேறு பாரதூரமான மனித உரிமைப் பிரச்சனைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு விசாரணை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில முக்கியமான உண்மையைக் கண்டறியும் இலக்குகளுக்கு உதவியுள்ள அதேவேளையில் பெருமளவில் இவ்வாணைக்குழுக்கள் இனங்காணப்பட்ட மீறல்களுக்கு விரிவான வகைப்பொறுப்பை ஏற்படுத்தத்தவறியுள்ளன. அனேக ஆணைக்குழுக்கள் பகிரங்க அறிக்கையொன்றைத் தயாரிக்கத் தவறியுள்ளதுடன் அவற்றின் விதப்புரைகளும் அரிதாகவே செயற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வகைப்பொறுப்பின் குறித்த சில அம்சங்களை முன்னேற்றுவதற்குப் பங்களிக்கக்கூடிய வாய்ப்புடையது. எனினும் குழுவுக்கு இப்போதும் கடுமையான ஐயப்பாடுகள் உள்ளதுடன் ஆணைக்குழு காணாமல் போன ஆட்களின் வழக்குகளைப் பின்தொடர்வதிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும். ஆட்களின் நலனோம்புகையைக் கண்காணிப்பதிலும் அரசியல் துணிவையும் நடுவழிகாணும் திறத்தையும் வெளிப்படுத்திக்காட்ட வேண்டுமென்றும் நம்புகின்றது.

### வகைப்பொறுப்புக்குள்ள ஏனயை தடைகள்

குழு அதன் பணியின் போது, இலங்கையில் ஏனைய பல்வேறு சமகாலப் பிரச்சினைகள் இருப்பதனையும் அவற்றில் கவனஞ்செலுத்தாதுவிடின் அவை உண்மையான வகைப்பொறுப்பை நோக்கிய முயற்சிகளைத் தடுக்கவும் அதன் விளைவாக நீடித்த சமாதானத்துக்கான வாய்ப்புக்களைக் கீழறுக்கவும் கூடுமென்பதை அவதானித்தது: (i) ‘‘பயங்கரவாதத்தை’’ தோற்கடிப்பதற்கான வழிமுறைகளையும் துணிவையும் விருத்தி செய்துள்ளதன் மூலம் அரசியல் சுயாதிக்கத்துக்கும் அங்கீகாரத்துக்குமான தமிழர் அபிலாசைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதென்ற அதன் வாதத்தினூடாக வெளிப்படுத்தப்படும் அரசாங்கத்தின் வெற்றி ஆரவாரமும் அதன் இராணுவத் தந்திரோபாயத்தின் மனிதக் கிரயம் தொடர்பில் அதன் மறுப்பும்; (ii) தொடர்ந்து மேற்கொள்ளப்படும் விலக்கி வைக்கும் கொள்கைகள். இனத்துவத்தின் அடிப்படையிலானவையென உணரப்பட்ட அல்லது உண்மையில் இடம்பெற்ற அரசியல் சமூக மற்றும் பொருளாதார விலக்கல்தான் முரண்பாட்டின் மையமாக இருந்துள்ளதனால் அவை குறிப்பாகத் தீங்கானவை; (iii) மேலே குறிப்பிடப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் மட்டுமன்றி முன்னைய மோதல் வலயம் தொடர்ந்தும் இராணுவமயமாக்கப்படுதலும் துணைப்படைப் பதிலாட்களைப் பயன்படுத்துதலும் உட்பட, யுத்தகால நடவடிக்கைகளின் தொடர்ச்சி. இவை எல்லாம் அச்சமும் மிரட்டலும் வன்முறையுமென்ற ஒரு சூழ்நிலையை நீடித்திருக்கச் செய்கின்றன; (iv) ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள். அவை சனநாயக ஆட்சிமுறைக்கு முரணானவையென்பதுடன் அடிப்படைப் பிரசைகளின் உரிமைகளையும் மட்டுப்படுத்துகின்றன; அத்துடன் (v) பல தசாப்தங்களாக எல்.ரி.ரி.ஈ.க்கு இன்றியமையாத தார்மீக ஆதரவும் பொருள் ஆதரவும் வழங்கிய, உலகில் சிதறிப்பரவியுள்ள தமிழரின் பங்கு. அவர்களில் சிலர் வன்னியின் மனிதாபிமானப் பேரழிவில் எல்.ரி.ரி.ஈ.யின் பங்கை ஒப்புக்கொள்ள மறுப்பதனால் வகைப்பொறுப்புக்கும் தங்குதிறனுள்ள சமாதானத்துக்கும் மேலுமொரு தடையை உருவாக்குகின்றனர்.

நீண்ட காலமாகத் தொடர்கின்ற இன-தேசிய முரண்பாட்டின் மூலகாரணங்கள் உட்பட, கடந்த காலத்தின் பரந்த பாங்குகள் பற்றிய நேர்மையான மதிப்பீடொன்றைச் செய்வதற்கு இடமளிக்கக்கூடியதாக, வகைப்பொறுப்புக்குச் சாதகமான ஒரு சூழல் இப்போது உள்ளதாயில்லை. அதற்கு மனித உரிமைகள் மதிக்கப்படுகின்ற வெளிப்படையான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான திட்டவட்டமான நடவடிக்கைகளும், நாட்டின் எதிர்காலத்துக்கான அத்திவாரமாக வெற்றி ஆரவாரத்திலிருந்தும், இலங்கையின் இனப் பல்வகைமையையும் தமிழர்கள் உட்பட அதன் எல்லா மக்களுக்கும் முழுமையான, உட்படுத்திய பிரசாவுரிமையையும் ஒப்புக்கொள்கின்ற ஓர் அரசியல் தீர்வுக்கான உண்மையான ஓர் ஈடுபாட்டுப் பொறுப்பை மறுப்பதிலிருந்தும் விலகிச் செல்கின்ற ஓர் அடிப்படையான நிலைமாற்றமும் தேவைப்படும்.

### குடிமக்களைப் பாதுகாப்பதில் சர்வதேசத்தின் பங்கு

யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது ஐக்கிய நாடுகளின் அரசியல் உறுப்புக்களும் அமைப்புக்களும் குடிமக்களைப் பாதுகாத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறின. அரசாங்கம் குடிமக்களைப் பாதுகாக்கவும் வைத்தியசாலைகள் மீதும் ஐக்கியநாடுகளின் அல்லது ICRCஇன் அமைவிடங்கள் மீதும் ஷெல் தாக்குதலை நிறுத்தவும் வேண்டுமென்று மூத்த சர்வதேச அதிகாரிகள் பகிரங்கமாகவும் அரசாங்கத்திடம் தனியாகவும் பரிந்துரைத்த போதிலும், குழுவின் கருத்துப்படி, வன்னியில் நிகழ்வுகள் படிப்படியாக வளர்ச்சிபெறுகின்ற வேளையில் உயிரிழப்புத் தொகைகளைப் பகிரங்கமாகப் பயன்படுத்தியிருந்தால் அது குடிமக்களைப் பாதுகாப்பதற்கான

அறைகூவலை வலுப்படுத்தியிருக்கும். அதுமட்டுமன்றி, யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து மனித உரிமைகள் சபை இலங்கை பற்றி அதன் மே 2009 தீர்மானத்தை நிறைவேற்றிய போது பூரணமற்ற தகவலின் பேரில் அது செயற்பட்டதாயிருக்கக்கூடும்.

**விதப்புரைகள்**

இச் சூழமைவில் பின்வரும் நடவடிக்கைகளைக் குழு விதந்துரைக்கின்றது. அவை ஒட்டுமொத்தமாக, செயலாளர் நாயகத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் வகைப்பொறுப்புப் பற்றித் தொடர்ந்து இடம்பெறுகின்றதும் ஆக்கபூர்வமானதுமான ஓர் ஈடுபாட்டுக்கான சட்டகமாகப் பயன்படுமென அது நம்புகின்றது. அத்தியாவசியமானவையென்றும் அவற்றுக்கு இலங்கை அரசாங்கத்தினதும் ஐக்கிய நாடுகளினதும் வேறு தரப்புக்களினதும் நிரப்புக்கூறான நடவடிக்கைகள் தேவையென்றும் குழு கருதுகின்ற வகைப்பொறுப்புப் பற்றிய பல்வேறு பரிமாணங்களிலும் அவை கவனஞ் செலுத்துகின்றன.

**விதப்புரை 1: விசாரணைகள்**

அ. குழுவால் நம்பகத்தக்கனவாகக் காணப்பட்ட சார்த்துரைகளின் அடிப்படையில், இலங்கை அரசாங்கம், அதன் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு இணக்கமாகவும் பயனுறுதியுள்ள உள்நாட்டு வகைப்பொறுப்புச் செயல்முறையொன்றைத் தொடக்கிவைக்கும் நோக்குடனும், ஆயுதமோதலில் ஈடுபட்ட இரு பக்கங்களாலும் புரியப்பட்டனவாகச் சார்த்தப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் இம் மீறல்களையும் ஏனைய மீறல்களையும் பற்றிய தன்னியல்பான விசாரணைகளை உடனடியாகத் தொடங்கவேண்டும்.

ஆ. செயலாளர் நாயகம் சுதந்திரமான சர்வதேசப் பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் ஆணை பின்வரும் ஒருங்குநிகழ்கின்ற கடமைகளை உள்ளடக்க வேண்டும்:

(i) இலங்கை அரசாங்கம், சார்த்தப்பட்ட மீறல்களின் தன்னியல்பான விசாரணைகள் உட்பட, பயனுறுதியுள்ள உள்நாட்டு வகைப்பொறுப்புச் செயல்முறையொன்றை எந்தளவுக்கு நடத்திச் செல்கின்றதென்று கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும், அதன் காண்புகளின் மீது செயலாளர் நாயகத்துக்குக் காலத்துக்குகாலம் ஆலோசனை கூறுதலும்;

(ii) தன்னியல்பான பயனுறுதியுள்ள உள்நாட்டு விசாரணைகளைக் கவனத்திலெடுத்து, சார்த்தப்பட்ட மீறல்கள் பற்றிச் சுதந்திரமாக விசாரணைகளை நடத்துதல்; அத்துடன்

(iii) குழுவாலும் ஐக்கிய நாடுகள் முறைமையிலுள்ள ஏனைய அமைப்புக்களாலும் திரட்டப்பட்ட தகவல்கள் உட்பட, யுத்தத்தின் இறுதிக் கட்டங்களுக்கான வகைப்பொறுப்புடன் தொடர்புடையனவாக அதற்கு வழங்கப்பட்ட தகவல்களைப் பொருத்தமான எதிர்காலப் பயனுக்காகச் சேகரித்தலும் பாதுகாத்தலும்.

**விதப்புரை 2: வகைப்பொறுப்பை முன்னேற்றுவதற்கான ஏனைய உடனடி நடவடிக்கைகள்**

அ. இலங்கை அரசாங்கம், வன்னியில் பலியானவர்களும் உயிர்பிழைத்தவர்களுமான அனைவரினதும் உரிமைகளையும் மாண்பையும் ஒப்புக்கொள்வதில் கவனஞ்செலுத்தி, பின்வரும் குறுகிய கால நடவடிக்கைகளைச் செயற்படுத்த வேண்டும்:

(i) அரசினாலும் அதன் உறுப்புகளினாலும் எல்லாத் துணைப்படைகளினாலும் அரசின் பெயராட்களாகச் செயற்படுகின்ற அல்லது அரசால் சகித்துக் கொள்ளப்படுகின்ற ஏனைய குழுக்களாலும் புரியப்படும் எல்லா வன்செயல்களையும் முடிவுக்குக் கொண்டுவருதல்;

(ii) மனித எச்சங்களை மீட்பதற்கும் அவர்களின் குடும்பங்களிடம் திருப்பிக் கொடுப்பதற்கும் வசதிசெய்து கொடுத்தலும் இறந்தவர்களுக்கான கலாசாரச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கு இடமளித்தலும்;

(iii) மேலும் விசாரணைக்கும் சிவில் கோரிக்கைகளுக்குமான உரிமையை விட்டுக்கொடுக்காது, குடும்ப உறுப்பினர்களால் கோரப்படும் போது, இறந்தவர்களுக்கும் காணாமற் போனவர்களுக்குமான இறப்புச் சான்றிதழ்களை துரிதமாகவும் கண்ணியத்துடனும், கட்டணமின்றி வழங்குதல்;

(iv) உயிர்பிழைத்தவர்கள் அனைவருக்கும், அவர்களின் கலாசார விழுமியங்களுக்கும் பாரம்பரிய வழக்கங்களுக்கும் மதிப்பளித்து, உளச்சமூக ஆதரவு வழங்குதல் அல்லது அதற்கு வசதிசெய்து கொடுத்தல்;
(v) இடம்பெயர்ந்த ஆட்கள் எல்லோரையும் விடுவித்தலும், அவர்களின் விருப்பத்துக்கிணங்க, அவர்களின் முன்னைய வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு அல்லது மீளக்குடியமர்வதற்கு வசதிசெய்துகொடுத்தல்;
(vi) அத்துடன் உயிர்பிழைத்தவர்கள் எல்லோரும் வழமையான வாழ்வுக்குத் திரும்புவதற்கு உதவும்பொருட்டுத் தொடர்ந்து இடைக்கால நிவாரணம் வழங்குதல்.

ஆ. இலங்கை அரசாங்கம் வலுக்கட்டாயத்தின் பேரில் காணாமற் போனவர்களாக அறிவிக்கப்பட்ட ஆட்களுக்கு நேர்ந்ததையும் அவர்களின் இடத்தையும் விசாரணை செய்யவும் வெளிப்படுத்தவும் வேண்டும். இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம் வலிந்து செயற்படுத்தப்பட்ட மற்றும் தன்விருப்பல்லாத காணாமற் போதல்கள் பற்றிய செயற்குழுவை இலங்கைக்கு வருகை தரும்படி அழைக்க வேண்டும்.

இ. நாட்டிலுள்ள அரசியல் நிலைமையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் அவசரகால ஒழுங்குவிதிகளை உடனடியாக நீக்குவதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கு முரணாயுள்ள எல்லா ஏற்பாடுகளையும் மாற்றியமைப்பதற்கும் பொறுப்பேற்க வேண்டுமென்பதுடன் இவற்றின் கீழும் வேறு ஏற்பாடுகளின் கீழும் பிடித்து வைத்திருக்கப்பட்டுள்ள சந்தேகத்துக்குரிய எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் தொடர்பிலும் ஏனைய எல்லா ஆட்கள் தொடர்பிலும் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும்:

(i) இப்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள எல்லோரினதும் பெயர்களை, அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் எதுவாயிருந்தாலும், வெளியிடுதலும் அவர்களின் தடுப்புக்கான சட்ட அடிப்படையை அவர்களுக்கு அறிவித்தலும்;
(ii) தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவருக்கும் குடும்ப உறுப்பினர்களையும் சட்ட ஆலோசனைகளையும் ஒழுங்காக அணுகுவதற்கு இடமளித்தல்;
(iii) தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் தமது தடுப்பின் தன்னிலையான நியாயப்படுத்தலை நீதிமன்றத்தில் வாதிடுவதற்கு இடமளித்தல்;
(iv) கடுங்குற்றங்களுக்குப் போதிய சான்றுள்ளவர்களுக்கெதிராகக் குற்றஞ்சாட்டுதலும் ஏனைய எல்லோரையும் விடுவித்து, அவர்கள் மேலும் இடையூறின்றிச் சமுதாயத்துடன் மீள ஒன்றிணைவதற்கு இடமளித்தலும்.

ஈ. இலங்கை அரசாங்கம் அரச வன்முறையையும், ஈடுபடுவதற்கும் ஒன்று கூடுவதற்கும் கருத்துவெளிப்படுத்துவதற்குமான சுதந்திரங்களை மட்டுப்படுத்துகின்ற அல்லது அச்சமான ஒரு சூழ்நிலைக்கு வேறுவகையில் பங்களிக்கின்ற ஏனைய நடைமுறைகளையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

**விதப்புரை 3: நீண்ட கால வகைப்பொறுப்பு நடவடிக்கைகள்**

கடந்த காலம் பற்றிய ஒரு நேர்மையான பரிசீலனைக்கு இப்போதுள்ள சூழ்நிலை சாதகமற்றதாயுள்ள அதேவேளையில், நீண்ட கால நோக்கில், அரசியல் வாய்ப்புக்கள் திறப்பதற்கு இடமளிக்கப்படும் போது யுத்தத்தின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு முழுமையான வகைப்பொறுப்பை நோக்கிச் செல்வதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன:

அ. LLRC இன் பணியைக் கவனத்தில் கொண்டு ஆயின் அதிலிருந்து வேறுபட்டதாக, இலங்கை பின்வருவனவற்றை ஒரு திறனாய்வு முறையில் ஆராய்ந்து பார்ப்பதற்கு உறுதியான சிவில் சமுதாயப் பங்குபற்றலைக் கொண்ட செயல்முறையொன்றைத் தொடக்கிவைக்க வேண்டும். இருபக்கங்களிலும் இனத்-தேசிய கடும்போக்குவாதம்; யுத்தநடவடிக்கையும் மீறல்களின் பாங்குகளும்; மற்றும் ஏற்புடைய நிறுவனரீதியான பொறுப்புக்கள் என்பவை உட்பட மோதலின் மூலகாரணங்கள்
ஆ. இலங்கை அரசாங்கம் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் மிகுதியான குடிமக்களின் உயிரிழப்புக்களில் அதன் பங்கையும் அவற்றுக்கான பொறுப்பையும் பற்றிய ஒரு பகிரங்கமான, முறைப்படியான ஒப்புக்கொள்ளலை வெளியிட வேண்டும்.
இ. இலங்கை அரசாங்கம், யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது புரியப்பட்ட பாரதூரமான மீறல்களுக்குப் பலியானவர்கள் அனைவருக்கும், அவர்களில் பெண்கள், பிள்ளைகள் மற்றும்

குறிப்பாக வடுப்படக்கூடிய குழுக்கள் மீதான விசேட கவனத்துடன், சர்வதேசக் கட்டளைத் தரங்களுக்கிணங்க, ஈடுசெய்தல்கள் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தொடங்கி வைக்க வேண்டும்.

**விதப்புரை 4: ஐக்கிய நாடுகள்**

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது வன்னியில் குடிமக்களின் நெருக்கடிநிலைக்கும் அதன் பின்விளைவுக்கும் ஐக்கிய நாடுகளின் பதிற்செயலைப் பார்க்குமிடத்து:

அ. இவ்வறிக்கையின் அடிப்படையில், மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் அதன் மே 2009 விசேட அமர்வுத் தீர்மானத்தை (A/HRS/S-11/L.1/Rev.2) மீள்பரிசீலனை செய்யும்படி அழைக்கப்பட வேண்டும்.

ஆ. ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு ஆணைகளைச் செயற்படுத்துதல் தொடர்பில் இலங்கையில் யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் முறைமையின் நடவடிக்கைகளையும் பின்விளைவுகளையும் பற்றிய விரிவான மீளாய்வொன்றைச் செயலாளர் நாயகம் நடத்த வேண்டும்.

இவ்விதப்புரைகளில் சுருங்கக் கூறியவாறு செயலாளர் நாயகத்துக்கான குழுவின் அறிக்கைக்கும் அதன் ஆலோசனைக்கும் இலங்கையில் யுத்தத்துக்குப் பலியானவர்களினதும் சிவில் சமுதாயத்தினதும் துணிவும் மீட்டெழுச்சியும் தூண்டுதலாயுள்ளன. இவ்விதப்புரைகள் பின்பற்றப்படுமாயின், கூட்டு ஈடுபாட்டுப் பொறுப்பைத் திருப்திசெய்யக்கூடியதும் இலங்கையை நீதியும் மாண்பும் சமாதானமுமென்ற பாதையில் இட்டுச்செல்லக்கூடியதுமான ஒரு மெய்யான வகைப்பொறுப்புச் செயல்முறையை அவை கொண்டிருக்கும்.